**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 430/2025**
**வழக்கு சாட்சி PW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அன்பரசி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கணபதி | தொழில் | : | பீடி சுற்றுதல் |
| கிராமம் | : | ஆலடிப்பட்டி | வயது | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 27th, 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் ஆலடிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் தொழில் செய்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். இரண்டு வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு நாங்கள் தூங்கிக்கொண்டிருந்தோம். திடீரென புகை வந்தது. நாங்கள் போய் பார்த்தபோது எங்களுடைய வீட்டு கதவு எரிந்து புகை மூட்டம் வந்தது. பின்னர் நாங்கள் புகார் கொடுத்தோம். போலீசார் விசாரணை செய்தபோது, எதிரி தான் தீ வைத்ததாக நாங்கள் தெரிந்துகொண்டோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

போலீசார் சொல்லித் தான் எதிரியை இந்த வழக்கில் ஈடுபடுத்தியது எனக்கு தெரியும் என்றால் சரிதான். எங்கள் வீட்டு சாலையிலிருந்து வடபுறமாக போனால் அந்த பகுதியில் நிறைய அரிசி ஆலைகள் மற்றும் சில ஆலைகள் உண்டு என்றால் சரிதான். அந்த சாலையில் எப்போதும்

ஆள்நடமாட்டம், போக்குவரத்து இருக்கும் என்று சொன்னால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்கள் போலீசார் கூறியதன் பேரில் சொல்கிறேன் என்றாலும், எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் வீட்டிலேயே இல்லை என்றாலும், அதனால் தான் என்னால் நாள், நேரம் பற்றி குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.28 16:30:42 +0530